


21.08.2024

தலைப்புச் செய்திகள்

1. ஜனநாயகம், மற்றும் பன்முகத்தன்மை மரபுகளை இந்தியாவும் - போலந்தும் பரஸ்பரம் முன்னெடுத்துச் செல்வதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

2. நாடுமுழுவதிலும் ஒருகோடி சில்லரை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு. பியூஷ்கோயல் வலியுறுத்தி உள்ளார்.

3. தமிழகம் தொழில்கள் தொடங்க உகந்த மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. கிருஷ்ணகிரி அருகே தனியார் பயிற்சி பள்ளி பாலியல் வன்முறை சம்பவத்தை விசாரிக்க காவல்துறை தலைமையில் சிறப்பு புலனாய்வு குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.

5. சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 விமான நிலையங்களில் குரங்கம்மை பரிசோதனைகள் தொடங்கப் பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□

பிரதமர்

மத்திய ஐரோப்பா நாடுகளின் முக்கிய பொருளாதார பங்களிப்பு நாடாக போலந்து திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

போலந்து மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு 3 நாள் அரசுமுறை பயணமாக இன்றுகாலை புறப்பட்டு சென்றுள்ள பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஜனநாயகம் மற்றும் பன்முகத் தன்மையை முன்னெடுத்துச் செல்வதில் போலந்தும் இந்தியாவும் பரஸ்பர ஒத்துழைப்பை நல்கி வருவதாக எடுத்துரைத்தார்.

இரு நாடுகளுக்கு இடையே 70 ஆண்டுகளாக அரசியல் நட்புறவு நிலவி வருவதாகவும், அந்நாட்டு பிரதமரையும், அதிபரையும் சந்திப்பதை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஸெலன்ஸ்கியின் அழைப்பை ஏற்று அங்கு செல்ல இருப்பதாக கூறிய பிரதமர் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தி, அங்கு நிலவும் போர் சூழலின் மத்தியில் அமைதிக்கான தீர்மானத்தை எட்டுவதற்கான ஒருவாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இப்பிராந்தியத்தில் அமைதியும், ஸ்திரத்தன்மையும் மீண்டும் திரும்பும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள பிரதமர், தமது இப்பயணம் இவ்விரு நாடுகள் உடனான நட்புறவை மேலும் மேம்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

ஜக்தீப் தன்கர்

இந்தியா மற்றும் ஆப்பிரிக்கா நாடுகளால் தென்னாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த முடியும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்

புதுதில்லியில் 19-வது இந்தியா ஆப்பிரிக்கா வர்த்தக மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், தூய்மைத்தொழில்நுட்பம், காலநிலை மாற்றம், வேளாண் மீட்சி, கடல்சார் பாதுகாப்பு, நீலபுரட்சி இணைப்புகள் உள்ளிட்ட பிரிவுகளில் இரு நாடுகளும் இணைந்து பணியாற்ற ஏராளமான வாய்ப்புகள் உள்ளதாக குறிப்பிட்டார்.

ஆப்பிரிக்கா உடன் இணைந்து விண்வெளி துறை ஒத்துழைப்பை இந்தியா முன்னெடுத்துச் செல்வதாக சுட்டிக்காட்டிய அவர், இதன்மூலம் மின்னனு பிரிவு வளர்ச்சிப் பெறுவதாகவும் எடுத்துரைத்தார்

ஆப்பிரிக்க யூனியனின் வளர்ச்சிக்கான கட்டமைப்பு பயிற்சி, கல்வி வாய்ப்புகளை இந்தியா வழங்கி வருவதாகவும் அவர் கூறினார்

இந்தியாவின் 4-வது பெரிய வர்த்தக நாடாக ஆப்பிரிக்கா திகழ்கிறது என்று கூறிய திரு. ஜக்தீப்தன்கர் இந்த மாநாட்டின் மூலம் பிரகாசமான எதிர்கால வாய்ப்புகளுக்கான முயற்சிகள் ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

□□□□□□□□

பியூஷ்கோயல்

நாடுமுழுவதிலும் ஒருகோடி சிறு குறு சில்லரை வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இணையதளம், வர்த்தகம் மூலமான வேலைவாய்ப்பு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், ஏராளமான தகுதியுடைய சில்லரை வணிகர்கள் தொழிலை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளுக்காக காத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

வேலை வாய்ப்புகள் மற்றும் நாட்டின் எதிர்கால திட்டங்களில் மக்கள் உரிய பங்களிப்பை அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

தொழில்நுட்பம் சார்ந்த படைப்பாற்றல் திறன் நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்வதாக இருக்கும் அதே வேளையில் ஜனநாயகம் மற்றும் சமூகத்தின் பெரும்பான்மையான மக்களுக்கு பயனளிக்கும் வகையில் அமையவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

□□□□□□□□

ஹெர்வ் டெல்.்.பின்

இணையதளங்களின் பயங்கரவாத செயல்பாட்டு சவால்களை எதிர்கொள்ள மண்டல அளவில் ஒருங்கிணைந்து செயல்படுவதன் அவசியத்தை இந்தியாவிற்கான, ஐரோப்பிய யூனியன் தூதர் திரு. ஹெர்வ் டெல்.்.பின் வலியுறுத்தி உள்ளார்.

புதுதில்லியில் இந்திய ஐரோப்பிய யூனியன் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இணையதளங்களில் தீவிரவாத, பயங்கரவாத குற்ற செயல்கள் களையப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்

மனித செயல்பாடுகளின் இருண்ட பக்கங்களையும் இணையதளம் வெளிப்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இணையதளத்தின் மூலம் பழமைவாத குற்றச்செயல்கள் தொடர்பான சவால்களை எதிர்கொள்வது குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படும்.

தெற்காசியா, ஐரோப்பிய நாடுகளின் கல்வி, சட்டம் நிபுணர்கள் இந்த மாநாட்டில் பங்கேற்றுள்ளனர்.

□□□□□□□□

நீதிமன்றம்

தமிழகம் முழுவதும் நீர்நிலைகள் அரசு நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற, அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய தமிழக தலைமை செயலாளருக்கு சென்னை உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பான வழக்கை விசாரித்த பொறுப்பு தலைமை நீதிபதி கிருஷ்ணகுமார் தலைமையிலான அமர்வு, இதுதொடர்பாக அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு குழுக்கள் இவற்றை முறையாக கண்காணிக்கின்றதா என்றும் கேள்வி எழுப்பியது.

இதனையடுத்து இவ்வழக்கு விசாரணையை நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

□□□□□□□□

முதலமைச்சர்

தமிழகம் தொழில்கள் தொடங்க உகந்த மாநிலமாக திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் “தமிழ்நாடு முதலீட்டாளர்கள் மாநாடு 2024”-ஐ இன்று துவக்கி வைத்து பேசியஅவர், 2030-ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஒருலட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலமாக முன்னேற்றுவதே இலக்கு என்றும் அவர் கூறினார்.

கடந்த 3 ஆண்டுகளில் 9 லட்சத்து 74 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் 6 லட்சத்து 64 ஆயிரம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முதலீட்டாளர்கள் ஆவர்வமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பெரும்பாலான வேலைவாய்ப்புகள் தமிழகத்தில மகளிரை முன்னிறுத்தியே உருவாக்கப்படுவதாக அவர் கூறினார்.

பெண் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

.. வாய்ஸ் ..

□□□□□□□□

முதலமைச்சர் – உத்தரவு

கிருஷ்ணகிரி அருகே தனியார் பயிற்சி பள்ளி முகாமில் மாணவிகள் பாலியல் துன்புறுத்தல் சம்பவத்தில், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த சம்பவம் தொடர்பான விசாரணையை 15 நாட்களுக்குள் முடிக்கவும், இதற்கென காவல்துறை தலைமையில் சிறப்பு புலனாய்வுக்குழுவும், சமூக நலத்துறை செயலாளர் தலைமையில் பல்நோக்கு குழுவும் அமைத்திட ஆணையிட்டுள்ளார்.

இவ்வழக்குகளின் விசாரணையை விரைந்து முடித்து 60 நாட்களுக்குள் குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

□□□□□□□□

மா.சுப்ரமணியன்

சென்னை சர்வதேச விமானநிலைய முனையத்தில் குரங்கம்மை நோய்த்தொற்று பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுவதை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் இன்று ஆய்வுசெய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅமைச்சர் அமெரிக்கா, ஐரோப்பா, சீனா உள்ளிட்ட 116 நாடுகளில் குரங்கம்மை தொற்று பரவி இருப்பதாகவும், எனவே இதனை அவசர நிலை பிரகடனமாக உலக சுகாதார மையம் அறிவித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இதன் தொடர்ச்சியாக மத்திய அரசு மேற்கொண்டுள்ள பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒருபகுதியாக சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய 4 விமான நிலையங்களில் குரங்கம்மை பரிசோதனைகள் தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

கோவிட் காலம் போல, சர்வதேச விமான பயணிகளின் உடல் வெப்பம் பரிசோதிக்கப்பட்டு, காய்ச்சல் கண்டறியப்பட்டால், விமான நிலையத்திலேயே அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு முதலுதவிக்கு பின்னர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றார்.

இதற்கென சென்னை, ராஜீவ்காந்தி மருத்துவமனையில் 10 படுக்கைகளுடன் தனிமைப் படுத்தப்பட்ட வார்டுகள் அமைக்கப் பட்டுள்ளதாகவும்,

கோவை, மதுரை, திருச்சி விமான நிலையங்களிலும் இதேபோல் வார்டுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் கூறினார்.

கொப்பளம், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் பொதுமக்கள் உடனடியாக அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற அவர் அறிவுறுத்தினார்.

விமானம் மற்றும் கப்பல் மூலம் தமிழகம் வரும் வெளிநாட்டு பயணிகள் தீவிர பரிசோதனைகள் செய்யப்படுவதாக அமைச்சர் கூறினார்.

தமிழ்நாட்டில் குரங்கம்மை நோய் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் திரு. மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

□□□□□□□□

மகேஷ் பொய்யாமொழி

திருச்சி மாவட்டம் மணப்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பில் மலையடிப்பட்டி தார்சாலை பலப்படுத்தும் பணிகளை மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று தொடங்கி வைத்தார்.

30 லட்சம் ரூபாய் மதிப்பில், 60 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைப்பதற்கான பூர்வாங்க பணிகளையும் அவர் தொடங்கிவைத்தார்.

கனவு இல்லம் திட்டத்தின் கீழ் 86 பயனாளிகளுக்கு வீடு கட்டுவதற்கான ஆணைகளை வழங்கிய அமைச்சர் மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு வங்கிகடன் இணைப்பு உதவிகளையும் வழங்கினார்.

□□□□□□□□

சிவசங்கர்

சென்னை மாநகர பேருந்துகளில் கையடக்க கருவி மூலம் டிக்கெட் வழங்கும் முறை அறிமுகம் செய்யப்படும் என்று மாநில போக்குவரத்துதுறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்

அரியலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சென்னையில் தாழ்தள பேருந்துகள் இயக்கம் தொடங்கிவைக்கப் பட்டுள்ளதாக கூறினார்.

மின்சார பேருந்துகள் வாங்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருப்பதாக கூறியஅவர், போக்குவரத்து துறையில் பொதுமக்களுக்கு தேவையான தொழில்நுட்ப வசதிகள் உருவாக்கப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் கிராம ஊராட்சிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை அமைச்சர் வழங்கினார்

□□□□□□□

ஜீவானந்தம்

பொதுவுடைமை வீரர் என அழைக்கப்படும் விடுதலை போராட்ட வீரர் பா. ஜீவானந்தத்தின்108-வது பிறந்தநாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி அவரது சொந்த ஊரான கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் உள்ள நினைவு மண்டபத்தின் அன்னாரது திருவுருவ சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அழகுமீனா உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

□□□□□□□

இளம் பகவத்

தூத்துக்குடி மாவட்டத்தில் கல்வி மருத்துவம், திறன் மேம்பாடு மற்றும் அதுசார்ந்த வேலை வாய்ப்புகளை அதிகரிக்க கவனம் செலுத்தப்படும் என்று புதிய ஆட்சித்தலைவராக இன்று பொறுப்பேற்ற திரு. இளம் பகவத் தெரிவித்திருக்கிறார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதோடு அரசின் நலத்திட்டங்கள் மக்களை செவ்வனே சென்றடைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று கூறியுள்ளார்

□□□□□□□

உங்களைத் தேடி திட்டம்

தமிழ்நாட்டில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் அரசு அலுவலகங்களின் செயல்பாடுகள், அரசின் நலத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இன்று ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூரில் வேளாண் அலுவலகம், உழவர் சந்தை, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் போன்றவற்றை ஆட்சித்தலைவர் திரு. மா. பிரதீப்குமார் ஆய்வுசெய்தார்.

அங்குள்ள பதிவேடுகளையும் விதைகளின் இருப்பையும் அவர் பார்வையிட்டார்.

வெங்கங்குடி கிராமத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ள அறிவுசார் மைய கட்டிடம், எரிவாயு தகனமேடை கட்டிடத்தையும் அவர் ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம் நகரத்துப்பட்டி ஊராட்சிய ஒன்றிய பள்ளியில் மாணாக்கருக்கு வழங்கப்படும் காலை உணவின் தரத்தை ஆட்சித்தலைவர் திருமதி. மு.அருணா ஆய்வுசெய்தார்

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூர் வட்டத்தில் அரசின் நலத்திட்டப்பணிகளை ஆட்சித்தலைவர்கள் திரு. பிரசாந்த் பார்வையிட்டார்.

□□□□□□□

வெள்ளப்பெருக்கு

வேலூர் மாவட்டம் மேல் அரசம் பட்டியில் உள்ள தீர்த்தம் கிராமம், உத்ரகாவேரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் அகரம், குருவராஜாபாளையம், நேமந்தபுரம், பாலப்பாடி உள்ளிட்ட கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்

□□□□□□□

கன்னியாகுமரி

கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதியில் கனமழை தொடர்வதால் கோதையாறு, மோதிமலை பகுதிகளில் காட்டாற்று வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது.

5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மேம்பாலம் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□

திருநெல்வேலி

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்மழைக் காரணமாக திருக்குறுங்குடி நம்பி கோவிலுக்கு பக்தர்கள் செல்ல வனத்துறை தடைவிதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

□□□□□□□

கால்பந்து

காத்மண்டுவில் நடைபெறும் 20 வயதிற்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து சாம்பியன் போட்டியில் நாளைமறுநாள் இந்தியா - மாலத்தீவை எதிர்கொள்கிறது.

□□□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.